சட்டத்தின் துணைகொண்டு சமுதாய தீமைகளைக் களைந்திடுக!

காலம் வரும் எனக் காத்திருப்பது சரியல்ல

பொருளாதார நிலை சீர்பட்டாலன்றி வறுமை ஒழிய வழியில்லை

Phone No 4502

விலை அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

39

மலர் 1] சென்னை (19—4—50) வெளியூர் (20—4—50) [இதழ் 229

அனாதைகளுக்கு ஆதரவு தர ஆவன செய்க!

"வறுமையும், ஆதரவற்றத் தன்மையும் இந்நாட்டில் மலிந்துவிட்டன. இது காரணமாகவே அநேக பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைக் காப்பாற்ற முடியாமல் கைவிட்டுவிடுகின்றனர். இதனாலேயே அனாதைச் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது. இந்த நிலைமை மாற வேண்டுமானால் நாட்டுப் பெரு மக்களும் அரசாங்கமும் முன் வந்து இப்பிரச்னையைத் தீர்க்க துணிந்து பணியாற்ற வேண்டும்."

சமுதாய சீர்திருத்தத்திற்கு சட்டம் அவசியம் என்று சொல்லப்படுகிறது. சமுதாயக் கொடுமைகளை ஒழிக்க சட்டம் செய்ய வேண்டியது ஒருபுறமிருப்பினும், சட்டம் பயன்தரும் அளவுக்கு நிலைமை பக்குவமடைய வேண்டும். அப்படிப்பட்ட பக்குவ நிலை ஏற்படும்போது சமுதாயத் தீமைகளை ஒழிக்கும் சட்டம் செய்ய அரசியலார் பின்வாங்க மாட்டார்கள்.

என்று கடந்த திங்கட்கிழமையன்று நடைபெற்ற 'ஔவை இல்லம்' 19-ம் ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்த சென்னை நிதி அமைச்சர் கோபாலரெட்டி குறிப்பிட்டார்.

அனாதைச் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்குக் காரணம் வறுமையும் ஆதரவின்மையுமே ஆகும் என்பதை அமைச்சரே ஒப்புக்கொள்ளுகிறார். ஆனால் நிலைமையைமாற்றி அமைக்கும் ஆற்றல் ஆட்சியாளரிடம் இல்லை என்பதையும் அதே நேரத்தில் ஒப்புக் கொள்ளும் முறையிலே, சமுதாய தீமைகளைக் களைந்தெறிய காலம் இதுவல்ல என்கிறார்.

கொடுமை கண்ணுக்குத் தெரிகிறது. அதன் விளைவும் இன்னதென்று புரிகிறது அமைச்சருக்கு. இந்நிலையிலே அரசாங்கத்தின் சார்பிலே, அனாதைகளின் மத்தியில் பேசும் வாய்ப்புபெற்ற அமைச்சர் என்ன செய்தி இருக்க வேண்டும்.

"அனாதைச் சிறுவர்களை ஆதரிக்க வேண்டிய கடமை ஆட்சியாளருடையது. எனவே இன்றே இதற்கு ஆவன செய்ய முயலுவோம்" என்றல்லவா கூறியிருக்க வேண்டும். ஆனால் அங்ஙனம் கூறினார் இல்லை—கூறும் துணிவு அவருக்கு உண்டாகவில்லை.

அமைச்சர் கோபாலர் சாதாரண அமைச்சரல்ல, நிதி அமைச்சர். நிதியை நீதிக்கு, நேர்மைக்குப் பயன்படுத்த வேண்டிய பொறுப்பு மிக்கப் பணியை மேற்கொண்டிருப்பவர். இப்படிப்பட்டவருக்கு சமுதாயத்திலே உள்ள சீர்கேடுகள் இன்னவை என்பது நன்கு தெரிகிறது; அந்தச் சீர்கேடுகளுக்குக் காரணம் வறுமை என்பதையும் அவர் அறிந்திருக்கிறார். ஆனால் அந்த வறுமையை ஓட்ட பொருளாதார நிலை சீர்பட வேண்டும் என்பதை அவர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. பொது மக்கள் மீதே பாரத்தைப் போட்டுப் பேசுகிறார். இது ஒருபுறமிருக்கட்டும்.

சமுதாயத்தில் காணப்படும் தவறுகளை ஒழிக்க கால

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

பாக்கிஸ்தானில் கம்யூனிஸம் வளருகிறது

படித்தவரன்றி பாமரரும் பாசம் காட்டுகின்றனர்

லண்டன், ஏப். 18—

பாகிஸ்தானில் தங்கள் செல்வாக்கைப் பரவச்செய்ய கம்யூனிஸ்டுகள் தங்கள் இயக்கத்தை விரிவான முறையில் ஆரப்பித்திருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகிறதென்று தன் லாகூர் நிருபர் அனுப்பிய செய்தியை 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகை, முக்கியம் கொடுத்து வெளியிட்டுள்ளது.

இந்தியா முழுவதுமே தங்கள் ஆதிக்கத்திற்குள் கொண்டுவரவேண்டும் என்ற மாஸ்கோவின் இரகசிய உத்திரவின் பேரிலேயே, இத்தகைய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றன வென்று சந்தேகப்பட்டு வருகிறதென்று அவர் கூறுகிறார்.

அவர் மேலும் அறிவித்திருப்பதாவது:—"கம்யூனிஸம் ஒன்றுமறியாத விவசாயிகளுக்கிடையேமட்டுமின்றி, படித்தவர்களுக்கிடையேயும் பரவி வருகிறது. லாகூரிலும், ஸிந்துவிலும் முக்யமாக இந்நிலைமை இருந்துவருகிறது என்று திட்டமாகச் சொல்லலாம்.

கிழக்குப் பாக்கிஸ்தானில் உள்ள கம்யூனிஸ்டுகள் மேற்கு வங்கக் கம்யூனிஸ்டுகளுடன் ஒத்துழைத்து வருவதாகத் தெரிகிறது.

பர்மா, இந்தோ சீனாவிலுள்ள கம்யூனிஸ்டு கொரில்லாப் படைகளுக்கும், இந்த கம்யூனிஸ்டுகளுக்கும் தொடர்பு இருந்து வருவதாகக் கூறப்படுகிறது.

வடமேற்கு எல்லை மாகாணத்தில் முக்கியமாக சண்டைகளுள்ள பிரதேசத்தில், கம்யூனிஸ்டு ஏஜெண்டுகள் சுறுசுறுப்பாக இருந்துவருவதாகவும் தெரிய வருகிறது

விமானப் பிரயாண கட்டணம் குறையும்

பிரிட்டனில் புது டர்போ பன் விமானங்கள் உபயோகத்திற்கு வரும்போது, விமானப் பிரயாணக் கட்டணம், தரைப்பிரயாண கட்டண அளவுக்குக் குறைந்துவிடும் என்று நிபுணர்கள் கருதுகிறார்கள். —ஜுனோஸ்

ஜப்பான் கம்யூனிஸ்டு கட்சியில் பிளவு

'டிட்டோ'யிஸ்டுகள் தோன்றியுள்ளனர்?

லண்டன், ஏப். 18—

ஜப்பானியக் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் பிளவு ஏற்பட்டிருக்கிறதென்று இப்பொழுது டோக்கியோவில் அதிகாரபூர்வமாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'அகஹடா' இரு மெம்பர்களை — கோஷமோஷிகோ, மெஞ்ஜோமியாமோட்டோ — டிராட்ஸ்கி கட்சியை சேர்ந்தவர்கள் என்று புகார் கூறியிருக்கிறது.

கட்சியின் காரியதரிசி டோகுடாவையும், கம்யூனிஸ்ட் தலைவர் ஸான்ஸோ நோஸாகாவையும் கவிழ்க்க சதி முயன்றதாக அப்பத்திரிகை கூறுகிறது.

ஜப்பானிய கம்யூனிஸ்ட் கட்சிக்குள் டிட்டோயிஸ்டுகள் இருக்கிறார்கள் என்ற சந்தேகம் மாஸ்கோவுக்கு இருந்துவருகிறது.

ஜார்டன் பார்லிமெண்ட்

அம்மான், ஏப். 18—

புதுத் தேர்தல்கள் விளைவாக அமைக்கப்பட்டிருக்கும் ஜோர்டனின் புது பார்லிமெண்ட் மே 1-ல் கூடும் என்று பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

பாலஸ்தீனத்தை ஜோர்டனுடன் இணைத்ததைப்பற்றி, ஜார்டன் மன்னர் பிரசங்கத்தில் எதுவும் இருக்காது என்றும், ஆனால் அஜெண்டாவில் அதுதான் முதல் விஷயமாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

மேற்கு ஜெர்மனி நிலைமை மோசமாகிறது

நிலைமையை அடக்க ஸ்காட்லாண்ட்யார்ட் நிபுணர் வருகிறார்

பெர்லின், ஏப். 18—

அடுத்த 6 வாரங்களுக்குள் முக்யமான மே தின சமயத்தில், மேற்கு ஜெர்மனியில் கம்யூனிஸ்டுகள் தங்கள் கைவரிசை காட்டாமல் ஒடுக்குவதற்காக பிரிட்டிஷ் சர்க்கார் ஸ்காட்லாண்ட் யார்டின் நிபுணரான ஜான் நாட்-பௌவா என்பவரை மேற்கு ஜெர்மனிக்கு அனுப்பியிருக்கின்றனர்.

ஜெர்மனியிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் அனுப்பியிருந்த வேண்டுகோளின் பேரிலேயே, இவர் அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பௌவர் இந்தியாவில் போலீஸ் அதிகாரியாக 1911 முதல் 1933 வரையில் சேவை செய்திருக்கிறார்.

பொலினில் எவ்வளவு தூரம் தொல்லை கொடுக்க முடியுமோ, அவ்வளவுக்குக் கொடுக்கக் கம்யூனிஸ்டுகள் ஆயத்தம் செய்து வருவதாகக் கூறப்படுகிறது. ஜெர்மனியின் பலமான அரசியல் கட்சியான கிருஸ்துவ ஜனநாயகக் கட்சியின்மீது, கம்யூனிஸ்டுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றனராம். ஏப்ரல் மாதத்தின் முதல் பகுதியில் இக்கட்சியைச் சேர்ந்த சுமார் 80 அதிகாரிகள் மேற்கு ஜெர்மனிக்கு தப்பி ஓடி வந்திருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

தெ. ஆ. மந்திரிமீது ஸ்மட்ஸ் குற்றச்சாட்டு

கேப்டவுன், ஏப். 18—

தென்னாப்பிரிக்க பாதுகாப்பு மந்திரி எராஸ்மஸ் யூனியனின் சேனாபதி ஜெனரல் லென்பர்ஸ் மீது சில புகார்கள் கூறியதின் விளைவாக, பெர்ஸ் பதவியைவிட்டு விலகுகிறார்.

அரசியல்வாதிகளை ராணுவத்தில் சேர்த்துக்கொள்வதாகவும், நிர்வாக விஷயத்தில் தலையிடுவதாகவும் பெர்ஸ்மீது மந்திரி குற்றம் சாட்டியிருக்கிறார்.

இதுபற்றி பீல்ட் மார்ஷல் ஸ்மட்ஸ் கூறுகையில், மந்திரி சேனாபதியை ஒரு குமாஸ்தாவை நடத்துவதுபோல் நடத்தியிருக்கிறார் என்றும், தென்னாப்பிரிக்காவின் பாதுகாப்பு இதனால்வெகுதூரம் பாதிக்கப்படும் என்றும், நிர்வாகத்தில் நடப்பது எதுவும் தெரியவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

ஸ்மட்ஸின் இக்கண்டனத்திற்கு, தான் பின்னர் பதிலளிப்பதாக மந்திரி எராஸ்மஸ் கூறினார்.

மலேயா போராட்டம் ஓராண்டில் ஒடுக்கப்படுமாம்

—(e)—

ஜெனரல் பிரிக்ஸ் நம்பிக்கை

குலாலம்பூர், ஏப். 18—

மலேயாவில் கலகம் இன்னும் ஒரு வருஷத்தில் அடியோடு ஒழிக்கப்பட்டுவிடும் என்று, இந்தப் பொறுப்பை ஏற்றுள்ள லெப்டினெண்ட் ஜெனரல் பிரிக்ஸ் கூறியிருக்கிறார்.

மலேயா கலகத்தின் வேர் ரஷ்யாவிலும், சீனாவிலும் இருக்கிறதென்றும், அங்கிருந்து எவ்வித உதவியும் வராமல் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றனவென்றும் அவர் கூறினார்

நேசநாடுகளை விரட்ட திட்டம்

பெர்லின், ஏப். 18—

பெர்லினைவிட்டு நேச நாட்டினரை வெளியேற்ற ஜெர்மன் கம்யூனிஸ்ட் சர்க்கார் திட்டம் போட்டிருப்பதாகவும், அதை முறியடிக்க மேற்கு ஜெர்மனியில் பலத்த முஸ்தீபுகள் செய்யப்பட்டு வருகிறதென்றும் தெரிய வருகிறது.

ஜுனோஸ்

மாலை மணி

சென்னை 19—4—50 புதன்கிழமை

பழமை சிரிக்கிறது!

சமயக் கண்ணோடு நோக்காமல் அதில் செறிந்து கிடக்கும் காவியச்சுவையை மக்கள் பருக வேண்டும்.

நமது தாய்மொழி என்ற ஆர்வத்தில் இலக்கிய நலத்தை அனுபவிப்போம். சதையைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்பக்திச்சுவையோடு பெரிய புராணத்தைப் படிப்பது ஒருமுறை; கவிதை உணர்ச்சியுடன் படிப்பது மற்றொருமுறை; பக்திச் சுவையில் ஈடுபட்டு படிப்பது, எந்த சமயத்தினர் எழுதியிருந்தாலும், சுவைத்துப்பும் தமிழ் நூலாய் இருந்தால் அது தமிழருடைய உடைமை ஆகும்.

மதநூல் என்கிற எண்ணமின்றி பெரியபுராணத்தில் கவிதைச் சிறப்பை உணர்ந்து. மக்களின் உண்மைப் பண்பாட்டை அடைந்து முன்னேறவேண்டும் என்பதே கழகத்தின் நோக்கம்.

பெரிய புராணத்தை இலக்கிய உணர்வுடன் படித்து சுவையைப் பருகவேண்டும். புலவரின் உள்ளத்தோடு ஒன்றிருப்பதுதான் இலக்கிய உணர்வின் அடிப்படையாகும். பாஷையைப் பற்றியோ அல்லது சமயத்தைப் பற்றியோ கவலைப்பட வேண்டிய அவசியமில்லை.

இவை, பக்திச்சுவையுணரா வாயுணர்வின் மாக்கள் யாராலோ, உதிர்க்கப்பட்டக் கருத்துகளாக இருக்கக்கூடும், என்றே எவர்க்கும் எண்ணத் தோனறும்.

பெரிய புராணம்-'பக்தியின் பெருமையை', திறத்தை, அவசியத்தை உணர்த்துவது; பக்திசுவை நனி சொட்டச் சொட்ட விளங்குவது என்றெல்லாம் பக்தச் சிரோன்மணிகள் இதுகாறும் கூறிவந்திருக்க, பக்திக்காகப் படிக்கவேண்டாம், காவிய ரஸனைக்காகப் படியுங்கள் என்றுகூற எந்தக் கயவர்களுக்குத் தைரியம் பிறந்தது, என்று கேட்கவே தோன்றும் ஆத்திக அன்பர்களுக்கு.

புராணங்களை எதிர்த்து வரும் அறிவியக்கத்தவரோ அல்லது நாத்திகத்தின் எல்லையை மிதித்தவர்களோ இப்படிச் சொல்லியிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு சிலர் வரினும் வருவர்.

இந்தக் கருத்துக்கள் அறிவியக்கமேடையிலே உதிர்க்கப்பட்டவையுமல்ல; அறிவியக்கத்தவரால் கூறப்பட்டவையுமல்ல சென்னைச் சேக்கிழார் கழக மேடையிலேதான், ஆத்திக அன்பர்களால்தான் இந்தக் கருத்துக்கள் பொழியப்பட்டிருக்கின்றன.

அதிசயம் ஆனால் உண்மை!

ஆத்திகர்களின் வாயிலிருந்து, அதுவும் சேக்கிழார் பெயரால் அமைந்த கழகத்தில் இப்படிப்பட்டக் கருத்துக்கள் வெளிவருவதென்றால், இந்த நாட்டில் அதிசயமல்லவா! பத்து ஆண்டுகளுக்கு முன்பு காணப்படாத—கேட்கமுடியாத அதிசயம் இப்பொழுது நிகழ்ந்திருக்கிறது! யார் அப்படிப்பட்ட அதிசயத்தை உண்டாக்கிய ஆத்திக சிரோன்மணிகள் என்று அறிய ஆசைப்படுகிறீர்களா? அவர்களை இதோ நிறுத்துகிறோம் காணுங்கள்

கி. வா. ஜகன்நாதனார்
எம். பக்தவத்ஸலனார்
ஆர். பி. சேதுப்பிள்ளையார்
எம். பி. பெரியசாமி தூரனார்
ஏ. சீனிவாசராகவனார்

இவர்கள்தாம் மேற் கூறிய கருத்துக்களை முறையே சிந்தியவர்கள். இவர்கள் ஆத்திகத்தைக் கழுவி விட்டு பக்தியைச் சிதைத்துவிட்டு வெளியேறியவர்களல்ல, இன்னமும் ஆத்திக சிரோன்மணிகளாகத்தான் விளங்குகிறார்கள். அப்படி இருந்தும், இப்படிச் சொல்லுகிறார்கள். காரணம் என்ன? அவர்கள் உள்ளூர உணர்ந்தோ உணராமலோ, விரும்பியோ விரும்பாமலோ, வேண்டியோ வேண்டாமலோ சொல்லித் தீரவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் — ஏற்படுத்தப்பட்டிருக்கும் சூழ்நிலையே அவர்களை அவ்வாறு சொல்ல வைத்துள்ளது. அப்படி அவர்களைச் சொல்லவைத்த சூழ்நிலையை உண்டாக்கியவர்கள் அறிவியக்கத்தைச் சார்ந்தவர்களேயாவார்கள். அவர்களின் சூறாவளிப் பிரசாரம் புராணப் பிரசங்கிகளை இப்படியெல்லாம் சொல்லவைக்கிறது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பெல்லாம், பக்திக்காகவும்; கதைக்காகவும் காவியரஸனைக்காகவும் பெரியபுராணத்தைப் படியுங்கள் என்று பிரசங்கமாரி பொழிந்துவந்த இந்த ஆத்திக கனதனவான்களெல்லாம், இப்போழுது கூறுகிறார்கள் பக்திக்காகவோ கதைக்காகவோ பெரிய புராணத்தைப் படிக்கவேண்டாம், காவிய ரஸத்திற்காகவாவது அதனைப்படியுங்கள் என்று. ஏன் இந்த மாற்றம்? இந்த மாற்றத்திற்கு மாற எப்படித் தைரியம் பிறந்தது? ஆணவ பீடத்தின் அதி உச்சியில் நின்று பக்திச் சுவையும், காவிய ரசத்தையும் பருகிக்கொண்டு நின்றவர்கள், காவிய ரசத்தை மட்டுமாவது பருகுங்கள் என்று மக்களை வேண்டிக் கொள்ளும் நிலைக்கு இறங்கி வருவானேன்? வரும்படி செய்தது யார்?

சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு, அறிவியக்கத்தார், பெரியபுராணத்தைக், கதைக்காக அதிலுள்ள மூடக்கருத்துக்காக குருட்டு பக்தியை அதுவளர்க்கும் தன்மைக்காக, மக்களை மடமையிலாழ்த்தும் அதன் போக்குக்காக, கோயில்கட்டி பஜனைக் கூடம் நடத்தச் சொல்லுக் அதன் கொடுமைக்காக, தேர் திருவிழாக்கள் செய்யச் சொல்லி அதுதூண்டிவிடும் கேவலத்திற்காக, அறிவைப் பக்தியின் பேரால் வது இழக்கச் செய்யும் பண்பிற்காக, அதனைத்தீயிலிட்டுப் பொசுக்குக என்று அறிவுப்பிரசாரம் செய்தது நாட்டினருக்கு நன்கு நினைவிருக்கலாம் அப்பொழுது காரணகாரியங்காட்டி விளக்கி, பெரிய புராணத்தை எந்த அளவுக்குப் போற்றமுடியும் எந்த அளவுக்கு அதனை வெறுத்துத்தள்ளுகிறோம் என்பதை அறிவியக்கச் சொற்பொழிவாளர்கள் நாடெங்கும் கூறிவந்தனர் மக்களை வேண்டாத ஆத்திகத்திலும், மூட நம்பிக்கையிலும், குருட்டுப் பழக்கவழக்கத்திலும் இருத்தி வைக்க, புராணீகர்களும், பழமைப் பண்டிதர்களும், மதத்தினால் மக்களை ஏமாற்றுபவர்களும் எந்த அளவுக்குப் பெரிய புராணத்தையும், கம்பராமாயணத்தையும் ஆயுதங்களாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதைத் தெளிவாக்கினார்கள் அறிவியக்கத்தார் ஏடுகள் மூலமாகவும், சொற்பொழிவுகள் வாயிலாகவும்., அவைகளைத் தீயிலிடுவோம் என்பதை வெறுப்பின் அறிகுறியாகக் கொண்டார்கள்.

அறிவியக்கத்தார் இப்படிப்பட்ட தீவிர முயற்சியை அப்பொழுதுகொள்ளுவதற்குக் காரணம், புராணப் பண்டிதர்களின் ஆணவப் பேச்சேயாகும், அவர்களின் ஆணவப் பேச்சு பகுத்தறிவாளர்களின் நடவடிக்கையைக் கொஞ்சம் தீவிரப்படுத்தியது. தூங்கும் புலியை இடறிவிட்டக் குருடன் பின்பு அப்புலியின் முன்னாய் தவிடுபொடியாவதுபோல அறிவியக்கத்தாரின் முன் புராணப் பண்டிதர்கள் நின்று பேச அற்றலில்லாமல் ஓடி ஒளிந்தார்கள். பெரிய புராணம், கம்பராமாயணம் பற்றிய கருத்துக்கள் அறிவியக்க மேடைகளில் வெள்ளம் போல் சொரியப்பட்டன. புராணப் பண்டிதர்கள் ஆடி. அடங்கி, ஒடுங்கினர். சிலர் எதிர்த்துப் பார்த்தனர்—களத்தில் வாலறுபட்டு ஓடினர் அறிவியக்கத்தாரின் புயல் வேகப் பிரசாரம், நாளடைவில் குறைந்து வேறு பக்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும் இவ்வேளையில் மறைந்திருந்த புராண பிரசங்கிகள் கம்பர் கழகம் என்றும், சேக்கிழார் கழகம் என்றும் பெயர் வைத்துக்கொண்டு மீண்டும் பழமைக்கு ஆதரவு தேடப் புறப்பட்டுள்ளனர்.

அறிவியக்கத்தார் கம்பராமாயணத்தைப் பற்றியும். பெரியபுராணத்தைப் பற்றியும் சிறிதுகாலம் மறந்திருப்பது புராணப்பிரியர்களுக்குக் கொஞ்சம் கூச்சல் விட்டது போலிருக்கிறது. அப்பொழுது வாங்கிய அறிவுச் சவுக்கடிகளால் நன்கு உறைக்கப்பெற்றக் காரணத்தால்தான், இப்பொழுது ஆணவத்தைக் கொஞ்சம் மறந்து, அச்சத்தை உள்ளத்தில் தாங்கிக்கொண்டு 'பக்திக்காகப் படிக்க வேண்டாம்; காவிய ரஸத்துக்காகப் படியுங்கள்'' என்று ஒருவர் மாற்றி ஒருவர் சேக்கிழார் கழகத் தொடக்கவிழாக் கூட்டத்திலே கூறியிருக்கிறார்கள் கதையைப் பற்றியோ, பக்தியைப்பற்றியோ கூறினால் நாடு ஏற்றுக்கொள்ளாது என்பதை ஓரளவுக்கு அறிந்து அச்சத்தோடு பேசியிருப்பதைக் கண்டு மதிக்கிறோம்; ஆனால் "காவிய ரஸத்தை அருந்துவதற்குத்தான் பெரிய புராணத்தைப் பயிலச் சொல்கிறோம்'' என் பதிலே அவர்களுக்குள்ள நாணயத்தை இன்னமும் சந்தேகிக்கத்தான் வேண்டியிருக்கிறது. பெரிய புராணக் கதைகளை நாட்டில் நிலைநாட்டவேண்டி மறைமுகமாகச் செய்யப்படும் சூழ்ச்சியோ என்று கருதவேண்டியிருக்கிறது. காவிய ரசத்தைக் காட்டி, பக்திப் படுகுழியில் தள்ளவைக்கும் சூழ்ச்சியோ என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது. ஏனென்றால், சேக்கிழார் கழகத் தொடக்க விழாவில் பேசிய ஒவ்வொருவரும் மேற்கூறிய கருத்துக்களை ஒருபக்கத்தில் சொல்லிய அளவோடு நின்று விடாமல், அதில் செறிந்துகாணப்படும் பக்தியையும், அதனைக் கொள்ளவேண்டிய அவசியத்தையும் வேறோர் இடத்தில் கூறுகிறார்கள். இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்படுகின்றன. முரண்பாடுடைய கருத்துக்களைச் சொல்லி, தப்பிக்க முயல்வது அவர்களின் இயல்பு என்றாலும், அந்த இயல்பை இங்கு காட்டியிருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டவும், மக்கள் அவர்கள் பால் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகிறது என்பதை உணர்த்தவும் இவற்றை இங்கு தெளிவுபடுத்துகிறோம்

'கம்பர் சழகம்,' 'சேக்கிழார் கழகம்'—இவை இரண்டின் நடவடிக்கைகளையும், அவற்றோடு தொடர்பு கொண்டிருப்போரையும் சணக்கிட்டுக் காணும்போது, பழமைப் புராணத்திற்குப் பாதை வகுக்கும் முயற்சியும், அதன்மூலம் அறிவியக்கப் பிரசாரத்தை அழிக்கும் முயற்சியும் மிகத் தீவிரமாக நடைபெறத் தொடங்கிவிட்டன என்பது தெளிவாகப் புலப்படும். ஆத்திகத்தைக் காப்பாற்றவும், அதன் மூலம் வைதிக உலுத்தர்களின் வாழ்வை நிலை நிறுத்தவும், சேக்கிழாரும், கம்பரும் கல்லறையிலிருந்து எழுப்பப்படுகிறார்கள்.

பகுத்தறிவை மீண்டும் பழமை பார்த்துச் சிரிக்க ஆரம்பித்திருக்கிறது! எனவே அந்தச் சிரிப்பை ஒழிக்கப், பகுத்தறிவுப்பாசறைகள் அமைத்துக் களங்காண வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது என்று கூறலாம். பகுத்தறிவுப் பாசறை வீரர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் நேரத்தில், அவர்களைத் தட்டி எழுப்பி, களத்திற்குப் போரிட அழைக்கும் முயற்சியே கம்பர் மாநாடும், சேக்கிழார் கழகத் தொடக்க விழாவுமாகும். மீண்டும் களம்காண புராணப் பாதுகாவலர்க்கு விருப்பமானால். தாராளமாக வரட்டும்; நன்றாக மாநாடுகள் கூட்டட்டும், சேக்கிழாரையும் கம்பரையும் கூட்டி வரட்டும்!

கல்லறை திறக்கப்படுகிறது!
கம்பரும், சேக்கிழாரும் வரட்டும். அவர்களைச் சந்திக்க, வீரர்கள் இங்கே, பகுத்தறிவுப் பாசறையில் இருக்கின்றனர்!

போர் அல்ல நோக்கம் என்றால்,பக்தியைமூடநம்பிக்கையை—குருட்டுப் பழக்க வழக்கத்தை காவியரஸத்தோடு மறைமுகமாக ஊட்ட முற்படாமல் இருக்கட்டும் கம்பர் கழகத்தாரும், சேக்கிழார் கழகத்தாரும்!

சட்டத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நிலை இன்னும் பக்குவப்படவில்லை என்று கூறும். அவரது நிலை கண்டுதான் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. 'நெய்க்கு தொன்னை ஆதாரமா, தொன்னைக்கு நெய் ஆதாரமா' என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டவன் கதைபோல நிலைமையை அனுசரித்து சட்டம் செய்வதா, சட்டத்தைக்கொண்டு நிலைமையை சரி செய்வதா என்ற ஆராய்ச்சியில் ஈடுபடுகிறார். நிலைமை பக்குவப்பட்ட பின்னரே சட்டம் செய்ய வேண்டும் என்பது சரியல்ல. சட்டத்தின் துணைகொண்டு நிலைமையை மாற்றி அமைக்கவேண்டுமேயொழிய நிலைமையை எதிர்பார்த்து சட்டம் செய்வது உலக நிலை அறிந்தோர் செய்யும் செயலல்ல. எந்த நாட்டிலும் சட்டத்தின் துணைகொண்டே பல சீர்திருத்தங்களுக்கு உயிர் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

எனவே, எதையும் சட்டத்தின் மூலம் சாதிக்கும் துணிவு அரசியலாருக்குத் தேவை பாதுகாப்பு என்ற பெயரில் பயங்கரச் சட்டங்களைச் செய்யத் துணிந்த ஆட்சியாளருக்கு இதுவா இயலாத காரியம்! அன்றியும், சட்டத்தின் துணைகொண்டு பணியாற்ற காலநிலை பக்குவமடையவில்லையாம்! அமைச்சர் கோபாலர் கூறும் காரணம் பொருத்தமற்றதாகும். கடந்த 25 ஆண்டுகளாக நமது சுயமரியாதை இயக்கம் வேலைசெய்து நாட்டைப் பக்குவபடுத்தியிருக்கும்போது,இன்னும் எப்படிப்பட்ட பக்குவ நிலையை அமைச்சர் எதிர்பார்க்கிறாரோ தெரியவில்லை!

எனவே அவசியமானதென்று தோன்றும் ஒரு பணியை சட்டத்தின் துணைகொண்டுசெய்யவேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறவிரும்புகிறோம். ஆட்சியாளர் இத்தகைய நல்ல காரியங்களுக்குச் சட்டம் செய்வார்களாயின் அதனை நிறைவேற்றித்தரும் பணியை நமது திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்று நடத்தும் என்றும் உறுதி கூறுகிறோம்.

இனி நடப்பவை

முன்னிப்பட்டு:- திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா, 22—4—50 சனியன்று மாலை 5-மணிக்கு நடைபெறும். அவ்வமயம் செய்யாறு புலவர் கோவிந்தன் பி. ஓ. எல். ஆரணி சி. வி. குப்புசாமி மற்றும் பல கழகத் தோழர்களும் பேசுவார்கள்.

* * *

குரிசிலாப்பட்டு:- இவ்வூர் தி. மு. கழக சார்பாக 21—4—50 இரவு தோழர் கே. எ. வெங்கட்டராமன் அவர்கள் தலைமையின் கீழ், மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர் சி.பி. சிற்றரசு அவர்கள் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

அன்று இரவு 10 மணிக்கு தோழர் ம. கண்ணன் எழுதிய 'மின்னொளி' என்ற நாடகம் இளமுச்சி நாடக சபையாரால் பகுத்தறிவு மன்றத்தில் நடைபெறும்.

வள்ளுவர் வகுத்த நெறியை வடவர் மறைத்தனர்

தமிழன் இழிநிலையடைய அதுவே காரணம்

திருவள்ளுவர் இளைஞர் கழகத்தில் நெடுஞ்செழியன் சொற்பொழிவு

9—4—50, முத்தியாலுப்பேட்டை, திருவள்ளுவர் இளைஞர் கழகத்தின் முதலாண்டு விழா நடைபெற்றது. விழாவிற்குத் தோழர் மா. இராசமாணிக்கம் எம். ஓ. எல். பி. ஓ. எல். தலைமை தாங்கினார்.

தோழியர் டாக்டர் ஆர். விசாலாட்சி,—நெடுஞ்செழியன் அவர்கள் போட்டியில் வெற்றி பெற்ற தோழர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். கழக ஆண்டு அறிக்கையை செயலாளர் வாசிக்கப்பட்ட பின்பு, பரிசு பெற்றத் தோழர்கள் லோகநாதன், இறைமுடிமணி ஆகியோர் சிறிது நேரம் பேசின முகவுரையாக தலைவர் சிறிது நேரம் பேசியபின், அடுத்துத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய அறிவுரையின் சுருக்கம் வருமாறு.

இவ்வள்ளுவர் கழகம் தோன்றி இன்றோடு ஆண்டு ஒன்றாகிறது. வள்ளுவர் வாழ்ந்து ஈராயிரம் வருடமாகிறது. இடையிலே நாம் வள்ளுவனை உணரவில்லை! சென்ற சில ஆண்டுகளாக தமிழ் நாடெங்கும் மொழியிலே விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம். அதன் எடுத்துக்காட்டுதான் இவ்வள்ளுவர் கழகம் தோன்றியிருப்பது. வள்ளுவனை இந்நாட்டார், பிறநாட்டிலிருந்து சேப்பும், சீப்பும் அதோடு மதமும் கொண்டுவந்து இங்கு குடியேறிய போர்ச்சுகீசியன், வெள்ளைக்காரன், கிருத்துவப்பாதிரிகள் ஆகிய அந்நியர்கள் வியாபாரத்தின் காரணமாக வந்து நம்மொழியைப் பயின்று பிறகு இங்குள்ள நூற்களை ஆராய்ந்து, லத்தீன், பிரான்சு, ஆங்கிலம் போன்ற நூற்களோடு ஒப்பிட்டுப்பார்த்து, அவைகளிலே இல்லாதது வள்ளுவன் குறளிலே எல்லையற்று இருக்கிறது என்று கால்டுவேல், ஜி. யூ. போப் போன்றவர்கள் கூறிய பிறகு தான், மக்கள் வள்ளுவனை, அவர் தந்த குறளினை உணர ஆரம்பித்தனர்.

காரணம், மக்கள் முன்னே பீமனையும், மதன காமராஜனையும், அல்லி அரசாணி மாலை ஆகியவை வைக்கப்பட்ட அளவுக்கு, நன்றமிழ் நூல்கள் வைக்கப்படாததுதான்.

முக்காலத்திலும்....!

வெள்ளைக்காரர்கள் ஆட்சி பீடமேறி, இந்நாட்டை ஆள சட்டம் செய்ய முற்பட்டபோது, அவன் மேஜை மீது வைக்கப்பட்டது, சாஸ்திர சம்பிரதாயங்களும், மனு, மாந்தாவும், வியசரும் அறிவு நூற்களை அப்புறப்படுத்தப்பட்டதனால் இவைகளே அடிப்படையின, இவைகளே சட்டமாயின் இன்றைய அளவு நம் இழிவு கொண்டவராக இருப்பதற்குக் காரணமும், குலத்துக்கொரு நீதி வழங்கப்படுவதற்குக் காரணம் இந்து சட்டமே! ஆனால் குறளிலே இந்தக் குறுகிய கொள்கையினைக் காண முடியாது—காட்டவும் முடியாது. அந்தப் பண்பினை நீங்கள் உணர வேண்டும். ஏறக்குறைய ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே எழுதப்பட்ட ஒரு நூல், இன்றளவும் வளர்வதே அதற்கொரு எடுத்துக்காட்டு. இறந்தகாலத்திற்கும், நிகழ் காலத்திற்கும், வருங்காலத்திற்கும், முக்காலத்திற்கும் பொருந்துகின்ற ஒரு நூல் இருக்கிறதா என்று கேட்டால் அதுதான் உலகமறையெனப்படும் திருக்குறள் என்பேன். இதை நான் ஏன் சொன்னேன் என்றால், "அறிவுடையார் எல்லாம் உடையார், அறிவில்லார் என்னுடைய ரேனும் இலர்" எனும் வள்ளுவன் வாக்கு எப்போதும், எங்கும் பொருந்தத் தான் செய்யும்!

ஆள் தேவையில்லை. நூல்தான்!

குறளினை மக்கள் இன்றைய அளவுக்கு உணராது இருப்பதற்குக் காரணம், வள்ளுவன் காலத்துக்குப் பின் தோன்றிய கம்பராமாயணமும், பாரதமும், புராணங்களும், மக்கள் சந்தைக்குக் கொண்டு வரப்பட்ட அளவுக்குக் குறளும், ஏன் சங்க இலக்கியங்களான, புறநானூறும், அகநானூறும், பரிபாடல்— திற்றுப்பத்து மற்றைய தமிழ்ப் பண்பு கொண்ட நூல்கள் வைக்கப்படாததுதான். வழக்கமாக மாறுதல் செய்கின்ற கூட்டத்தார் குறளிலேயும், தங்கள் குறுகிய மனதினைத் திணித்தனர். அதன்பயனாக, 'வள்ளுவனுக்குப் பூணூல் உண்டாமே நீறு பூசுவாராமே, 'ஆண்டவன்' தொண்டராமே என்று மக்களிடத்தே ஒரு மாறான— மடமையான ஐயம் இடம் பெறலாயிற்று. நமக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. அவர் நெசவு தொழில் செய்தாரா, அரச அவையிலே மந்திரியாக இருந்தாரா, அல்லது பனிதுரராகத்தான் வாழ்ந்தாரா என்று நாம் எண்ணி, அதனால் ஏக்கமும் கொள்ளத் தேவையில்லை. காரணம் அவர் வாழ்க்கைப் பற்றி நமக்கு ஏதும் தெரியாது. ஆனால் அவர் எந்த அறிஞரும், அடியாரும் வகுக்காத ஒரு வாழ்க்கைத் துணை நூலை—அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் ஒட்டிவருகின்ற ஓர் உயர்நூலை வகுத்த காரணத்தினால்தான், நாம் வள்ளுவனை வணங்குகிறோம். வரவேற்கிறோம் அவர்தம் நூலை எல்லாமதத்தினரும் — எல்லா நாட்டினரும் ஏற்றுக்கொள்ளுகின்ற அளவு, குறள் சிறந்து நிற்பதால்தான் நாம் இதை வரவேற்கிறோம்.

நட்டமில்லை!

வள்ளுவனார் தம் குறளிலே தெய்வம்-கடவுள், உலகம் இயற்றியான்; சந்திரன் என்ற ஆண்டவனைத் தானே குறிப்பிடுகிறார், அவர் ஆத்திகர் தானே, அதை ஏன் நம்பக்கூடாது என்ற எண்ணம் சிலருக்கு எழலாம். அதற்கு வள்ளுவனார், நான் கூறி விடுகிறேன் என்ற காரணத்திற்காக நீ, நம்பிவிடாதே. இந்த உனக்குச் சந்தேகம் வரும்போது, இந்தச் சாவியினை 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு'' உபயோகி என்று நம்மிடம் ஒப்படைக்கிறார். அவர் ஆக்கிய குறளிலே பத்துப் பாட்டுகள்தான் அப்படி 'ஆண்டவனைப்'பற்றி அமைந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. அப்படியே மக்கள் வள்ளுவரை ஆத்திகரென்றே ஒப்புக்கொண்டு, அவர் சொல்லும் 'கடவுளை' வணங்கினால் நமக்கொன்றும் நட்டமில்லை. காரணம், வள்ளுவன் காட்டுகின்ற கடவுள், இருண்ட இடத்திலே இருப்பதுமல்ல, பால பிஷேகம் செய்துகொள்ளு படியுமல்ல கொழுக்கட்டை, புளியதரை, பொங்கல் தத்துவானத்தை நாடி நிற்பதுமல்ல!

ஆராய்ந்து பார்!

வள்ளுவனார் எந்த இடத்திலும் நான சொன்னதை நம்பினால் 'மோக்ஷ', நம்பாவிட்டால், 'நரகம்' என்று நவிலவில்லை. அல்லது, பார்வதி பரமேசுவரனுக்குச் சொல்ல, பரமேசுவரன் நந்திக்குக் கூற, நந்தி நாரதனுக்குச் சொல்ல, அதைத்தன் நான் சொன்னேன், நானல்ல பொறுப்பாளி எனக் கூறுவதும் உண்டு ஆனால் வள்ளுவனார் எதையும் கேள், அதை ஆராய்ந்து பார் என்றுதான் கூறுகிறார்.

மறைந்த புலவர்களெல்லாம், மறுபடியும், கல்லறையினின்று உயிர்த்தெழுந்து, ஒரு மாநாடு கூட்டுவதாக வைத்துக்கொண்டால், அதற்குத் தலைவனாக-வள்ளுவனார் தான் வர முடியும்—காரணம் மற்றைய புலவர்கள், எந்த இடத்திலேயாவது மாட்டிக் கொள்ளத்தான் செய்வர்.

இன்று வள்ளுவன் கருத்தை அறிந்து, எப்படி இங்கு தமிழர்கள் ஆர்வங்கொண்டு பணியாற்றுகின்றனரோ, இதேபோல் அன்றே வள்ளுவன் கருத்து—நூல்— இந்நாட்டில் பரவியிருந்தால், நிச்சயமாகக் கூறலாம், இந்நாடு இத்துணை இழிநிலையடைந்திருக்காது. எப்போதோ நாகரிக நாடாக விளங்கியிருக்கும்.

அடிப்படை மாற வேண்டும்

ஐந்நூறு ஆண்டுகட்குமுன்பு தான் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்க நாடு, இன்று பாலர் செழித்துச் சிறந்து நிற்கிறது என்றால், இரண்டாயிரம் ஆண்டுகட்குமுன்னே இலக்கண, மொழி பண்பு கண்ட இந்நாடு, ஏனைத் தூங்குகின்றது? வள்ளுவன் கருத்துக்களை இந்நாட்டில் பரவாமல் இருட்டடிப்பு செய்ததல்லாமல், வேறு என்ன காரணம்காட்ட முடியும்?

இது வீண்—நவருன குற்றச்சாட்டு என்று யாரும் கூறிவிட முடியாது. "பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையான்'' என்ற குறள், இந்நாட்டிலே பரப்பப்பட்டிருந்தால், எப்படி இன்றைய அளவுக்கு நான்குஜாதியும் மதப் பூசல்களும் வளர்ந்திருக்க முடியும்? ஒரு பக்கத்திலே ஏட்டிலே 'ஜாதி'யினைப் பற்றி ஆதாரங்களை வைத்துக் கொண்டு நாட்டிலே பாரத புத்திரர்கள் 'எல்லோரும் ஓர் இனம்', என்றால் எப்படி ஆமுடியும்? அடிப்படை அழிக்கப்படவில்லையே!

முயலுக

தமிழிலே எப்படி 'பெஞ்சிலின்' என்ற வார்த்தை கிடையாதோ, அதேபோல்தான் சங்க இலக்கியங்களிலே, தமிழர் நூல்களிலே 'ஜாதி' என்ற சொல் கிடையாது. இது தமிழகத்துக்கு வெளிநாட்டுச் சரக்கு. இதைக் கொண்டுவந்தவர்கள் இன்றைய பார்ப்பனத் தோழர்கள் என்று நாங்கள் கூறவில்லை, ஒப்புக்கொள்ளுகிறோம் குற்றவாளிகள் மனு, மாந்தா வியாசர்தான் என்று. ஆனால், இந்த இருபதாம் நூற்றாண்டிலே வாழ்கிற பார்ப்பனத் தோழனைக் கேட்கிறேன் ஏன் 'ஜாதி' தவறு—கூடாது என்று துணிவோடு கூறவில்லை? கூற முடியவில்லை ஆகவே, இளைஞர்கள் இந்த ஜாதிச் சனியனை ஒழிக்க வீறுகொண்டெழ வேண்டும். ஒரு புதிய வீடு கட்டியவரை பார்த்து, "ஐயா! வீடு கட்டி முடித்துவிட்டீர்களா" என்று கேட்டால் என்ன சொல்லுவார் பதில்? "ஏதோ! ஆண்டவன் புண்ணியத்திலே கட்டிமுடிச்சுட்டேன்' என்றுதான் பதில் வரும். கல்லெடுத்தவன், கந்தன், சேரெடுத்தவன் சோமன். இவர் கூறுகிறார் 'ஆண்டவன் தயவிலே முடிந்துவிட்டேன்' என்று! இந்த மாதிரியான மடமைத்தனங்கள் ஒழிக்கப்பட தீவிர முயற்சி செய்யப்பட வேண்டும். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க நினைத்தபோது, ஆண்டவனை அருள்புரிய வேண்டவில்லை, ஓமகுண்டம் மூட்டவில்லை, முயன்றான் முடிவில் வெற்றி கண்டான்.

மனிதன் மர உரியுரித்து, பச்சைக்காய்கறி உண்டு, மரப்பொந்துகளே வீடாகக் கொண்டு, சக்கிமுக்கிகற்களைத் தட்டி நெருப்புக் கொண்டு வாழ்ந்தவன் இன்று, மாடமாளிகையில் வாழ்கிறான் வானவில்போன்ற பலவண்ண உடையும், இரவைப் பகலாக்கும் மின்சார விளக்கையும் கண்டுவிட்டான். காரணம் முயற்சிதான். இதைத்தான் வள்ளுவனார் "தெய்வத்தால் ஆகாதெனினும், முயற்சிதன்மெய் வருந்தக் கூலிதரும்'' என்கிறார்," முடிவாக தலைமையுரை கூற, செயலாளர் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

21 - 4 - 50

நாகர்கோவில்:—மு. கருணாநிதி, கி. மனோகரன், வை சுப்ரமணியம்.

22 - 4 - 50

முள்ளிப்பட்டு:—புலவர் கோவிந்தன், சி. வி. குப்புசாமி.

23 - 4 - 50

வையம்பாளையம் (கோவை):—என். வி. நடராசன்.

அரிசி வியாபாரி சுட்டுக்கொல்லப்பட்டார்

பாரிஸ், ஏப். 17—

கம்யூனிசத்தை எதிர்க்கும் அரிசி வியாபாரியான ஒரு ஆசியக் கோடீஸ்வரர் அவர் வீட்டில் குடும்பத்தினருடன் டெலிவிஷனைப் பார்த்து ரசித்துக் கொண்டிருக்கையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தோ-சீனாவில் வியட்னாம் படைகளைத் தாக்கி வரும் பிரெஞ்சு துருப்புகளுக்கு இவர் அரிசி சப்ளை செய்ததாலேயே ஒரு கம்யூனிஸ்டு இவரை தீர்த்து விட்டதாகக் கூறப்படுகிறது. இவருடைய மனைவி எதிர்த்து சண்டையிட்டதால் சமூகத்தில் குண்டடிபட்டு ஆஸ்பத்திரியில் இருக்கிறார்.

'பிரெஞ்சு துருப்புகளுக்கு அரிசி சப்ளை செய்தால் உன் உயிருக்கே ஆபத்து' என்ற பயமுறுத்தல் கடிதம் இவருக்கு முன்னதாகவே கிடைத்ததாம்.

டேனிஷ் தீவில் ரஷிய தளம்?

கோபன்ஹேகன், ஏப். 18—

பால்டிக்கிலுள்ள டேனிஷ் தீவான போர்ன்ஹோமில் தளம் ஏற்படுத்திக்கொள்ள அனுமதிக்க வேண்டும் என்று, ஸோவியத் சர்க்கார் டேனிஷ் அயல் நாட்டிலாகாவைக் கேட்டிருக்கிறது.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

திருச்சி நகர உட்கிளை
சக்ரமல்லூர்
மேற்குவட்டம் செவ்வாய்பேட்டை
நாகமநாயக்கன்பட்டி
சலகண்டபுரம்
சுண்டக்காமுத்தூர்
ஓட்டேரி—சென்னை
சங்கரன்கோவில்
ராஜாமடம்
அய்வனல்லூர்
மனப்பாறை
போரூம்பட்டு
வடக்கூர், தூத்துக்குடி
பம்பரஞ்சுத்தி
செய்யூர்

மற்றைய கழகம்

வடக்கூர், தூத்துக்குடி (சென. பா. த. ச. சங்கம்)
வண்ணையம்பதி—சென்னை (தி. இ. கழகம்)

நாட்டு நடப்பு

உறந்தை வள்ளுவர் மன்றம்

உறந்தை, ஏப். 10—

இவ்வூர் வள்ளுவர் மன்ற திருக்குறள் கட்டுரைப் போட்டிக்குக் கட்டுரை எழுதி அனுப்பிவிட்டீர்களா? அல்லது இன்றே எழுதி அனுப்புங்கள்.

கட்டுரை தலைப்பு:—'திருவள்ளுவர் பொருளாதாரவியுணர்'', ''திருவள்ளுவர் வகுத்த அன்பு நெறி'' ''திருவள்ளுவர் சர்வாதிகாரியானல்'' முழுத்தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்போகாமல் கட்டுரை எழுதவேண்டும். தாளின் ஒரே பக்கத்தில் தெளிவுபட எழுதவேண்டும். மொழிபெயர்த்தோ, பிறர் எழுதியதைப்பார்த்தோ எழுதக்கூடாது. 3-5-50 க்குள் கட்டுரைகளை எமக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். போட்டியின் முடிவு மே மாதம் 30-ம் தேதிக்குள் பத்திரிகையில் வெளியிடப்படும். பெண்களும் கட்டுரையில் கலந்து கொள்ளலாம்.

குயில் பீடி பேக்டரி

பொள்ளாச்சி, ஏப். 10—

7-4-50 அன்று இரவு தலைவர் தோழர் பி. என். இராமாநுஜம் அவர்கள் தலைமையில், அவசரக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம், குயில் பீடி பேக்டரியில் தொழிலாளர்கள் பத்திரிக்கைகள் படித்து வருவதைத் தடுத்துவரும் மானேஜரின் செய்கையைக் கண்டித்தும், 15-12-49 அன்று முதல் 1000 பீடிக்கு ரூ. 1-12-0 வீதம் கொடுக்கப்பட்டுவரும் கூலியை 15-12-49 தேதிவரை கொடுக்கப்பட்டுவந்த கூலியான ரூ. 2-0-0 வீதம், பீடித் தொழிலாளர்களின் விசாரணைக் கொடுத்துவரவேண்டுமென்று பீடிக்கம்பெனியின் முதலாளியைக் கேட்டுக்கொண்டு, தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டபின், செயலாளர் என். காதர்பாட்சா நன்றி கூறக்கூட்டம் முடிவுற்றது. தீர்மானங்களை மந்திரி அவர்களுக்கும், லேபர் கமிஷனர், லேபர் ஆபீசர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் கழகம்

மதுரை, ஏப். 10—

முருகு கை எழுத்துப் பத்திரிகை வெளியீடு விழா, டை கழக மன்றத்தில், ஞாயிறு இரவு ஆசிரியர் தோழர் தி. ப. சுப்பரமணியதாஸ் தலைமையில் முருகு என்னும் கையெழுத்துப் பத்திரிகை வெளியிடப்பட்டது. நாட்டின் சீர்திருத்தத்திற்கு, எழுத்தாளர்கள் கடமை என்னும் பொருள் பற்றி தோழர்கள் வரதன், ஆ. சண்முகவேல், முத்தையா, சவுந்தரமுத்து, முத்துசாமி புலவர் ஆகியோர் பேசினார்கள். முடிவாக தோழர் வெ. கைலாசம் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

சொற்பயிற்சிக் கூட்டம்

ஆக்காடு, ஏப். 15—

இவ்வூர் உயர்நிலைப் பள்ளியில், 12-4-50 அன்று மாலை, தோழர் அருணாசலம் பி. ஏ. எல். டி. அவர்கள் முன்னிலையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. புலவர் தோழர் மணிஎழிலன் மாணவர்கள் பேசும் முறைகளைப் பற்றியும், தோழர் இளங்குமரன் மாணவர் கடமைகளைக் குறித்தும் பேசினர். பின்னர் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

மந்திரம் என்பது தந்திரமே!

ராசலாபுரம், ஏப். 5—

இவ்வூர் லசிஆல்வன்ஸ் உயர்தர ஆரம்பப் பாடசாலையில் இன்று தோழர்கள் ஜி. அப்பாசாமி, எஸ். மோகவர்ணம் அவர்கள் தலைமையின் கீழ் பல அரிய மேஜிக் வேலைகளைக் காட்டி, அனைவர்களை உற்சாகப் படுத்தினர். பின்பு மந்திரம் என்பதைத் தந்திரம் என்று நிரூபித்துக் காண்பித்தார். கடைசியில் மோகவர்ணம் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

வள்ளுவர் விழா

கீழச்செல்லப்பட்டி, ஏப். 13—

இவ்வூர் எஸ். எம். எஸ். உயர்நிலைப்பள்ளியில் 12-4-50 அன்று மாலை, வித்துவான் தோழர் இளஞ்சேரன் தலைமையில், திருக்குறள் நாள் கொண்டாடப்பட்டது. அதுபோது, தோழர்கள் வித்துவான் மெ. சுந்தரம், வ. சீனிவாசன், டி. எஸ். சம்பந்தன், ப. அ. கருப்பன் செட்டியார், புலவர் சு. தில்லைக் கோவிந்தன் முதலியோர் திருக்குறளின் சிறப்புக் குறித்துச் சொற்பொழிவாற்றினர். தோழர் கி. சொக்கலிங்கம் அவர்கள் நன்றி நவிலலுடன், கூட்டம் இனிது நிறைவேறியது.

விவசாயிகள் சங்கம்

வாணியம்பாடி, ஏப். 16—

அர்ஜுன் நிலையத்தில் தோழர் வி. பி. வேணுகோபால் தலைமையில், வி. என். தத்தப்பன் முன்னுரையுடன் விவசாயிகள் சங்கம் ஒன்று நிறுவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. தலைவர் கே. கே. தங்கவேல், துணைத் தலைவர்:- கே. பி. கிருஷ்ணன், பொருள் உதப்பினர்:- சீராமுலு, செயலாளர்:- வி. பி. வேணுகோபால், துணைச் செயலாளர்:- சின்னராசு, ஏனைய செயற்குழுவினர்:- மு. எ. பெருமாள் கவுண்டர், எஸ். எம். இரத்தினம், டி. கோவிந்தசாமி, வி. டி. குப்புசாமி, எ. மாணிக்கம், சி. அனுமந்த கவுண்டர், எ. திருப்பதி கவுண்டர், வி. எம் கோபால், சையத்பாஷா, கே. இ. அருணாசலம், சின்னா கவுண்டர், டி. அருணகிரி தோழர் சீராமுலு முடிவாக நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

ஆதித்திராவிடர் சங்கம்

பாலக்காடு, ஏப். 11—

10—4—50-ல் அன்று மாலை இவ்வூர் பிர்க்கா ஆதித்திராவிட சங்கத்தின் கூட்டம் தோழர் பி. என். பெருமாள் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சுமார் 10 கிராமங்களிலுள்ள ஆதித்திராவிடர்கள் கலந்துகொண்டார்கள். கூட்டத்தின் தலைவரும் மற்றும் சில பிரமுகர்களும், சமூக சீர்திருத்தம் பற்றியும் முன்னேறவேண்டியது பற்றியும் விளக்கமாகப் பேசினார்கள். முடிவாக நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது.

அறிவாலய நாடகசபா

சக்கம்பட்டி, ஏப். 15—

தி. மு. கழகத்தின் ஆக்கத் திட்டங்களை நாடகவாயிலாக மதுரை மாவட்டம்எளித் பரப்பும் எண்ணம் கொண்டு 'ஏழை கண்ட நாடு'' எனும் நாடகம் இச்சபாவின் கீழ், 21-4-50முதல் துவக்கப்போகிறது. நடிப்புத் திறமையை அடிப்படையாகக்கொண்டு செயலாற்ற விரும்பும் தோழர்கள், தோழியர்கள் மா. க. செல்வராஜன் செயலாளர், ''அறிவாலய நாடக சபா'' சக்கம்பட்டி ஆண்டிபட்டி பி. ஓ. மதுரை ஜில்லா என்றமுகவரிக்குவிண்ணப்பித்துக்கொள்ளவும்.

திருவள்ளுவர் சொற்பயிற்சிக் கழகம்

வேலூர், ஏப். 5—

டை கழகத்தின் கூட்டம் 2-4-50 மாலை தோழர் ஆர். சுப்ரமணியம் அவர்கள் தலைமையில், கஸ்பா திரௌபதியம்மன் கோவில் கொட்டகையில் நடைபெற்றது. தலைவர் முன்னுரையில் மதக்கோட்டையை முற்றுகையிட்ட மாவீரர் அழகிரிசாமியைப்பற்றி விரிவுரை ஆற்றினர். பிறகு தோழர்கள் மா. பா. சாரதி, வே. அ. இளஞ்செழியன், வேலை, வில்லவன் ஆகியோர் அம்மாவீரன் திராவிடத்திற்குச் செய்த தொண்டினைப்பற்றிப் பேசினார்கள். பிறகு தோழர்கள் பாண்டியன், நெடுஞ்சுரைக்கோ, வாணன், குருநாதன், குப்புசாமி ஆகியோர் மூடநம்பிக்கையைப் பற்றியும், தீண்டாமையைப்பற்றியும் பேசி வெற்றி பெற்றார்கள்.

புராணத்துக்கு 'வக்காலத்து'

பக்தவத்சலனாரின் பக்திப் பரவசம்!

சென்னை, ஏப். 17—

''பெரிய புராணம் என்ற பெயரைக் கேட்ட அளவிலே மக்கள் அதனை வெறுக்கலாம். ஆனால் பெரிய புராணம் சேக்கிழாரின் பக்தியின் விளைவு. ஆங்கிலத்தில் மில்டன்போன்ற ஆசிரியர்கள் எழுதியுள்ள நூற்களைப் போன்றது பெரிய புராணம். அந்த ஆங்கில நூற்களை நாம் நம்பினாலும் நம்பாவிட்டாலும் போற்றிப் படிப்பது போல், இதையும் இலக்கியக் கண்கொண்டுபார்த்துப்படிக்க வேண்டும்.

பெரிய புராணம் போன்ற காவியங்களை அச்சிட்டு வெளியிடும் பணியை மடங்கள், தேவஸ்தானங்கள் மேற்கொள்ளவேண்டும்''

என்று சென்னையில் நடைபெற்ற சேக்கிழார் விழாவைத் துவக்கி வைத்த சென்னை மராமத்து அமைச்சர் பக்தவச்சலம் கூறினார்.

பின்னர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள்பேசுகையில், பெரிய புராணம் 63 நாயன்மார்களின் சரித்திரம் என்றும், தமிழருக்கு அது அரும்பொருளென்றும் கூறினார்.

காதலைக் கட்டுப்படுத்த!

மாலை நேரத்தில் பாடம்!

லண்டன், ஏப். 18—

இளம் வயதுள்ள புவர்கள் புவதிகளுக்கு காதலினால் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிப்பதற்கு வழிகாட்ட, லண்டன் இன்ஸ்டிடியூட் ஒன்று, மாலை வகுப்புகளை நடத்துகிறது. இவ்வகுப்புகளில் நிபுணர் யோசனைகள் அளிக்கப்படுமாம்.

யுவர்களும் யுவதிகளும் இவ்வகுப்புகளுக்கு மனம் விட்டுப் பேசி தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்ள வழி செய்யப்படுமாம்.

யாழ்ப்பாணத்திற்கு தமிழ்ப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாண தீபகற்பத்தில் உள்ள வட்டுக்கோட்டையில் தமிழ் சர்வகலாசாலையொன்றை நிறுவும் யோசனை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பதாக தெரியவருகின்றது. இதற்கு வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாண இந்து கல்லூரி தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது. இது சம்பந்தமாக பிரஸ்தாப கல்லூரி தலைமை ஆசிரியர் இ. கே. ஏ. செல்லையா பிரதம மந்திரிக்கு சமர்ப்பிப்பதற்கென ஒரு மகஜரைத் தயார்த்துள்ளார்.

தமிழ் மாணவர்கள் உயர்தரக் கல்வி பெறுவதற்கென சிறந்த கல்வி ஸ்தாபனமொன்று தற்பொழுது இல்லையென்றும், இதனால் அவர்கள் இந்திய சர்வகலாசாலைக்கு செல்லவேண்டியிருக்கிறதென்றும், அதிலும் அங்கு யாழ்ப்பாண மாணவர்கள் பிரவேசிப்பதிலுள்ள கஷ்டங்கள் வளர்ந்து கொண்டேயிருப்பதாயும் கூறப்படுகின்றது.

தமிழ்ப் பல்கலைக் கழகமொன்றை நிறுவுவதானது ஓர் சதந்திர நாடு என்ற முறையில் இலங்கையை ஒரு புதிய அந்தஸ்தில் அமரச் செய்வதாயிருக்குமென்றும் கருதப்படுகின்றது.

முத்தமிழ் வளர்ச்சி மாநாடு

கோவையில் மே 27, 28 நாட்களில்

நடைபெறும்

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்

தலைமைதாங்குவார்

இயல், இசை கூத்து—புலவர்கள் பலரும்

கலந்துகொள்வார்கள்

இரண்டு நாட்களிலும்,

சி. என். ஏ. குழுவினரின்

நாடகங்கள் நடைபெறும்

கோவை மாவட்ட தி. மு. கழகம்

குறிப்பு:—மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்த வேண்டியிருத்தலாலும், முன்புகுறிப்பிட்டபடி இடையில்போதுமான நாட்கள் இல்லாததாலும், மே 13 14-ம் நாட்களில் வைக்கப்பட்டிருந்த மாநாடு, மே 27, 28 நாட்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

விண்ட்ஸர் கோமகன் 'கோடீஸ்வரர்' ஆகலாம்

ஆட்டவா, ஏப். 17—

பிரிட்டிஷ் மன்னரின் சகோதரரான விண்ட்ஸர் கோமகன் ஒரு பெரும் கோடீஸ்வரர் ஆகலாம் எனத் தெரிகிறது.

ஆல்பர்ட்டாவில் இவருக்கு சொந்தமான 4000 ஏக்கர் பிரதேசத்தில் ஏராளமாக எண்ணெய் அகப்பட ஆரம்பித்திருக்கிறது. இந்த எண்ணெயை எடுத்து விற்பனை செய்ய சொகோனி ஆயில் கம்பெனி ஒரு நீண்டகால ஒப்பந்தத்தைச் செய்து கொள்ளவிருக்கிறது.

ஆல்பொட்டாவின் 4000 ஏக்கர் விண்ட்ஸடம் 99 வருஷ குத்தகையில் இருக்கிறது. இந்த பிரதேசத்திலுள்ள ஒப்பந்தம்போல் இல்லாமல் இதில் அகப்படும் எண்ணெய் விண்ட்ஸருக்கே சொந்தமானதென்றும் குத்தகை ஒப்பந்தத்திலும் கூறப்பட்டிருக்கிறது.

விண்ட்ஸர் தம்பதிகள் இன்று ஆட்டவாவுக்கு வருகின்றனர். ஜெனரல் அலெக்ஸாண்டரின் விருந்தினர்களாக அவர் தங்கியிருப்பர்.

மீண்டும் பறக்கும் தட்டு

பாரிஸ், ஏப். 18—

ரைனின் கரையில் ஒரு பறக்கும் தட்டை ஒரு டாக்டரும், அவர் மனைவியும் கண்டதாக செய்தி கிடைத்திருக்கிறது. கிராமத்திலுள்ள மற்றவர்களும் இதைக் கண்டதாகக் கூறப்படுகிறது.

இது சிவப்பு நிறமாக இருந்ததென்றும், ஸ்வீடன் நோக்கிச் சென்றதாகவும் அவர்கள் கூறுகிறார்கள். —ருனேஸ்

ஆண்களுக்கு கிராக்கி!

சிட்னி, ஏப். 18—

''உங்களுக்குக் கலியாணம் நடைபெறவேண்டுமென்றால், ஹாலிவுட் பக்கமே போகாதீர்கள்'' என்று பிரபல பிரபல நடிகை ஜேன்ஸ்டர் லின் அமெரிக்க யுவதிகளை எச்சரித்திருக்கிறார்.

ஹாலிவுட்டில் ஆண்கள் குறைவென்றும், ஒவ்வொரு ஆணையும் குறைந்தது இரண்டு யுவதிகள் வலை வீசுகிறார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

சேலத்தில் நமது புதிய ஏஜண்டின் முகவரி

S. குப்புசாமி & சன்ஸ்

சில்க் வியாபாரம்.

அம்மாப்பேட்டை, சேலம்.

செஞ்சீனாவின் பஞ்சநிலை

ஹாங்காங் ஏப் 18—

செஞ்சீனாவில் கடுமையான பஞ்சநிலை இருக்கிறதென்பதை சீன கம்யூனிஸ்ட் சர்க்கார் கடைசியாக ஒப்புக்கொண்டு, அயல்நாட்டிலுள்ள மிஷனரிகள் உதவிசெய்ய முன்வரவேண்டும் என்று கோரியிருக்கின்றனர்.

ஹைட்ரஜன் குண்டு அமைதி கொண்டுவரும்

ஆஸ்திரேலிய விஞ்ஞானிகளின் அதிசய முடிவு!

சிட்னி, ஏப். 18—

ஜலவாயுக் குண்டை அமெரிக்கா உற்பத்தி செய்வதைக் கண்டித்து, கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகள் அறிக்கை விடுத்திருந்தனர். இதை ஆட்சேபித்து சிட்னி சர்வகலாசாலையைச் சேர்ந்த 10 விஞ்ஞானிகள் ஒரு கூட்டறிக்கை விடுத்திருக்கின்றனர்.

அதில் அவர்கள் கூறியிருப்பதாவது:—இந்த வெடிக் குண்டை உற்பத்திச் செய்வதன் மூலம் அமைதி நிலவச் செய்ய முடியும் என்றே நாங்கள் கருதுகிறோம். கேம்பிரிட்ஜ் விஞ்ஞானிகள் கருத்தே உலக விஞ்ஞானிகளின் கருத்து என்று தவறான அர்த்தம் ஏற்பட்டு விடாமல் இருக்கவே இவ்வறிக்கையை வெளியிட்டிருக்கிறோம்.

பெடெயன் தண்டனையை குறைக்க கோரிக்கை

பாரிஸ், ஏப். 18—

மார்ஷல் பெடெய்னுக்கு தண்டனையைக் குறைக்க மனு, பெடெய்னுக்குத் தண்டனையைக் கொடுத்த நீதிபதிகளிலிருந்து சில பேர், தாக்கல் செய்யப்படும் எனத் தெரிகிறது

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.